தமிழ்நாடு அரசு பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள், சென்னை 28.

முன்னிலை. திரு.பிரதீப் யாதவ்,இ.ஆ.ப.,

.....

பதுத எண்.21236/இ1/2001 நாள் 24 .1.2003.

.....

பொருள்: பதிவு நடைமுறை ஆவணங்கள் பதிவு- தவறான பதிவுகள், ஆள் மாறாட்ட பதிவுகள் - தடை செய்தல் அறிவுரை வழங்கப்பட்டது.

.....

ஆணை.

ஆள் மாறாட்ட பதிவுகள் / போலி பதிவுகள் நடைபெறும் நிகழ்வுகள் பதிவுத்துறைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இச்செயல் துறையின் நன்மதிப்பை பாதிப்பதோடு அல்லாமல் பொதுமக்களின் சொந்த நலன் பாதிப்படைகின்றன. பதிவுச்சட்டம் பிரிவு 34 மற்றும் 35 (1) (a) மற்றும் பதிவு விதிகளில் விதி 55 மற்றும் நிலையாணை அத்தியாயம் IX ஆகியவைகளில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை எழுதித் தருபவர்/ பெறுபவர் அவர்கள்தான் என்பதை பதிவு அலுவலர் திருப்தி அடைந்து கொள்ள வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நடைமுறைகளை செவ்வனே செயல்படுத்த பதிவுச் சட்டம், 1908ல், பிரிவு 69 (j) ன் கீழ் பதிவுத்துறைத் தலைவரால் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன:

கிரய ஆவணங்களைப் பொறுத்து எழுதித் தருபவர் / பெறுபவர் மற்றும் இதர ஆவணங்களைப் பொறுத்து எழுதித் தருபவர்கள் இவர்களை அவர்கள்தாம் என அடையாளம் அறிய பதிவு அலுவலர்கள் கீழ்க்கண்ட அடையாளம் அறியும் வழிகளில் ஏதேனும் ஒன்றை தாக்கல் செய்ய அறிவித்து, அசலை சரிபார்த்து, அவ்வாறு அறிந்த விவரங்களை ஆவணத்தில் எழுதிக் கொடுப்பவர்/எழுதிப் பெறுபவர் மேலெழுத்து விவரங்களுடன் பார்க்கப்பட்ட ஆவண விவரங்களையும் சேர்த்து எழுத அறிவிக்கப்படுகின்றது. [ (உ-ம்: எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டது. X....., த/பெ,....., முகவரி) X.....அடையாளம் குறித்து .....ஆவணம் பார்க்கப்பட்டது. எண...../.நாள்....., அலுவலகம்)]

1. தேர்தல் ஆணைய வாக்காளர் அடையாள அட்டை
2. கடவுச் சீட்டு (Passport)
3. ஓட்டுநர் அடையாள அட்டை (நிழற்படம் ஒட்டிய)
4. வருமானவரித்துறை அடையாள அட்டை (PAN/GIR)
5. உணவு பங்கீடு அட்டை (குடும்ப தலைவர் அடையாளம் மட்டும்)
6. பணிசெய் அடையாள அட்டை (அரசு/அரசு சார்ந்த நிறுவனங்கள்/உள்ளாட்சி அமைப்புகள்)
7. வங்கி / அஞ்சலக கணக்கு புத்தகம் (நிழற்படம் ஒட்டிய)
8. மாணவர்கள் அடையாள அட்டை
9. பேருந்து/ரயில் வண்டி பயண அடையாள அட்டை.
10. துப்பாக்கி உரிமம்
11. ஓய்வூதிய அடையாள அட்டை
12. ஊனமுற்றோர் சான்று
13. சுதந்திர போராட்ட தியாகி அடையாள அட்டை.

Verified by KaatchiSeal ™

2. பொது/தனி அதிகார ஆவணங்கள் அடிப்படையில் முகவர்களால் எழுதிக் கொடுக்கப்படும் ஆவணங்களைப் பொறுத்து முகவர்களின் அடையாளம் அறியவும் மேல்கண்ட நெறிமுறை கையாளப்படல் வேண்டும்.

3. ஒரே நாளில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கட்கு ஒரு முறை சரிபார்த்தால் போதுமானது.

4. சாட்சிகளால் அடையாளம் காட்டப்படும் நடைமுறையும் தொடரும்.

5. பதிவு அலுவலர்கட்கு தெரிந்த நபர்களைப் பொறுத்தும் இந்த விவரங்கள் சரிபார்க்க மேலெழுத்தில் சேர்த்திட வேண்டும். இவ்வழக்குகளில் சாட்சிகள் தேவை இல்லை எனும் நிலையே தொடரும்.

6. இந்நெறிமுறைகள் 01.02.2003 முதல் செயல்பாட்டுக்கு வரும். அன்று முதல் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்கட்கு பொருந்தும்.

7. மாவட்டப் பதிவாளர்கள்/பதிவு அலுவலர்கள் தம் அலுவலக விளம்பர பலகையில் பொதுமக்கள் அறிய ஏதுவாக விவரம் உடன் வெளியிடல் வேண்டும்.

8. இந்த நெறிமுறைகள் சரிவர கடைபிடிக்கப்பட்டதா என்பதை தணிக்கை மற்றும் ஆய்வில் சரிபார்க்கப்படவேண்டும்.

இந்த ஆணை வரப்பெற்றதை துணைத் தலைவர்கள், பதிவுத்துறை தலைவருக்கும், மாவட்டப் பதிவாளர்கள் துணைத் தலைவர்கட்கும், சார்பதிவாளர்கள் மாவட்டப் பதிவாளர்கட்கும் ஒப்புதல் உடன் அளித்திடல் வேண்டும்.

ஒம்.24.1.2003
பதிவுத்துறைத் தலைவர்

/ஆணைப்படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக,

பெறுநர்

அனைத்து துணைத் தலைவர்கள்
‘‘ மாவட்டப் பதிவாளர்கள், (நிர்) , (த)
‘‘அலுவலர்கள், பதுதஅலுவலகம்
கண்காணிப்பாளர்கள்
பதிவுத்துறை பயிற்சி மையம், சென்னை 1.

நகல். பசெஅ, முஆகோப்பு
அரசுச் செயலாளர், வணிகவரித்துறை,
சென்னை 9 (தகவலுக்கு)

Verified RealEstate™